DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>(Chapter.. | ... | DEPOSITION OF WITNESS |
| Preliminary Register | ... | Case No. S.C.No.260/2024 |
| Sessions | ... | |
| Deposition of witness for | | Prosecution - P.W.2<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | பிரேம்குமார் |
| Father's Name | த/பெ.செந்தில்வேல் |
| Village | நேசமணிநகர் |
| Taluk | |
| Age | 21 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.02.2026.

**(1வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2 முதல் 6 எதிரிகள் ஆஜர்.)**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது முள்ளக்காடு நேசமணிநகர் 1வது தெருவில் குடியிருந்து வருகிறேன். மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1ஐ எனக்கு தெரியும். சுமார் ஒரு ஆண்டிற்கு முன்பு அ.சா.1 தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக தெரிந்து அவரை பார்ப்பதற்காக நான் அங்கு சென்றேன். அப்போது அங்கு வந்த முத்தையாபுரம் காவல் நிலைய போலிசார் என்னிடமும் கையெழுத்து பெற்றுக்கொண்டார்கள். புகார்மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.2** ஆகும்.

வேறு விவரம் எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பில் அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

போலிசார் விசாரணையில் 19.04.2024ம் தேதி மாலை 04.00 மணியளவில் அ.சா.1 கடைக்கு அருகில் வைத்து நேசமணிநகரை சேர்ந்த ஒருவருக்கும் குலையன்கரிசல் ஊரைச் சேர்ந்தவர்களுக்கும் தகராறு ஏற்பட்டு பின்னர் அவர்கள் சென்றுவிட்டார்கள் என்றும் அதன்பின்பு இரவு 08.45 மணியளவில் 2 இருசக்கர வாகனங்களில் பின்னர் விசாரித்து தெரிந்துகொண்ட ஆஜர் எதிரிகள் அருவாளுடன் வந்து நேசமணிநகரை சேர்ந்த சுரேஷ்குமார் என்பவரை அருவாளால் வெட்டிவிட்டார்கள் என்றும் அவருக்கு இடது தலை, இடதுகை நடுவிரல், வலதுகை சுண்டுவிரலில் காயங்கள் ஏற்பட்டது என்றும் சம்பவத்தை பார்த்து அ.சா.1ம் அவரது கடையில் வேலை பார்க்கும் சதீஷ்குமார், ஆத்தியப்பன் ஆகியோர் வெட்டாதீர்கள் என்று சத்தம் போட்டபோது எதிரிகளில் ஜெயந்த் என்பவர் அ.சா.1ன் உச்சந்தலையில் அருவாளால் வெட்டினார் என்றும் அவர் அலறி கீழே விழுந்துவிட்டார் என்றும் எதிரிகள் அவர்களை நோக்கி கொலை மிரட்டல் செய்துவிட்டு அ.சா.1 கடையிலிருந்த இரும்பு சேர், சோ கேஷ் கண்ணாடி, பிரிசர் பாக்ஸ் ஆகியவைகளை அடித்து உடைத்து ரூ.50000/- வரை சேதம் ஏற்படுத்தினார்கள் என்றும் அ.சா.1க்கு ஏற்பட்ட காயத்திற்கு அ.சா.1 தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றும் அங்கு வந்த முத்தையாபுரம் உதவி ஆய்வாளரிடம் ஒரு புகார்மனு கொடுத்தார் என்றும் அந்த புகார்மனுவில் நான் அறிவேன்

சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்று கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –** இல்லை.

**ஒம்/-R.V.ராஜகுமார்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**